நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, சாத்தூர்
திரு. சா. வரதராஜன், பி.ஏ., பி.எல்.,
நீதித்துறை நடுவர் எண்.2, சாத்தூர்.

**பிரிவு 313(1)(ஆ) CrPC –இன் படியான விசாரணை**

எதிரி : பால்பாண்டி

| | | | |
|---|---|---|---|
| 1. | கேள்வி | : | அ.சா.1 – மாலதி, அவருடைய சாட்சியத்தில், 18.07.2019 ம் தேதி இரவு 11.00 மணியளவில் அ.சா.1 மாலதி வீட்டிற்கு வெளியே நின்று போனில் பேசிக்கொண்டிருந்தபோது எதிரி பால்பாண்டியாகிய நீங்கள் குடிபோதையில் வந்து அ.சா.1ன் கையை பிடித்து இழுத்து காசு கொடுக்கிறேன் என்கூட படுக்க வா என்று கூறியதாகவும், மேலும் அவரை பார்த்து தேவிடியா, சுன்னி என்று கெட்டவார்த்தையால் பேசியதாகவும், யாரும் பக்கத்தில் இல்லை என்ற காரணத்தினால் வீட்டிலிருந்து அவர் வெளியே நடுத்தெருவிற்கு ஓடிவிட்டதாகவும் சாட்சியமளித்தள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | இல்லை |
| 2. | கேள்வி | : | அ.சா.1 – மாலதி, மேலும் அவருடைய சாட்சியத்தில், அன்றையதினம் 12.00 மணியளவில் வீட்டிற்கு வந்த அவரது மகன் சிவாவிடமும், மருமகன் கண்ணனிடமும் நடந்த விவரத்தை கூறியதாகவும், நடந்த சம்பவத்திற்கு மறுநாள் வெம்பக்கோட்டை காவல்நிலையத்தில் புகார் வாக்குமூலம் (அ.சா.ஆ.1) அளித்ததாகவும், இன்றளவும் அவர் வெளியே சென்றால் எதிரியாகிய நீங்கள் எதாவது செய்துவிடுவீர் என்ற பயத்தில் தான் சென்று வருவதாகவும் சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | என்னை வெம்பக்கோட்டை காவல் நிலையத்தில் இருந்து அழைத்தார்கள், அதற்குப் பிறகுதான் என் மீது புகார் கொடுத்துள்ளார் என்பது எனக்கு தெரியும். |
| 3 | கேள்வி | : | அ.சா.2 – கண்ணன், அவருடைய சாட்சியத்தில் 18.07.2019 ம் தேதி இரவு அவரது பாட்டியை மருத்துவமனையில் சேர்த்துவிட்டு அவரும் சிவாவும் 11.00 மணியளவில் வீட்டிற்கு வந்ததாகவும், அவரது வீட்டு திண்ணையில் நின்று கொண்டிருந்த எதிரி பால்பாண்டிய ஆகிய நீங்கள் அவரது அத்தையின் (அ.சா.1) கையை பிடித்து இழுத்து கொண்டிருந்ததாகவும், அவர்களை பார்த்ததும் எதிரியாகிய நீங்கள் மேற்கு பக்கமாக சென்றுவிட்டதாகவும், அவர் அவரது அத்தையிடம் (அ.சா.1) என்ன நடந்தது என்று கேட்டதற்கு அவரது அத்ததையிடம் (அ.சா.1) எதிரியாகிய நீங்கள் குடிபோதையில் வந்து காசு கொடுத்து வாடி புண்ட மவளே என்று படுக்க கூப்பிட்டதாக அவரது அத்தை கூறியதாகவும், அன்று இரவே 100 க்கு அழைக்கவும், அங்கு கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த ஒரு போலீசார் சம்பவ இடத்திற்கு வந்ததாகவும், மறுநாள் சம்பவம் தொடர்பாக அவரது அத்தை காவல்நிலையம் சென்று புகார் அளித்தாகவும் சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | பொய் சாட்சி |
| 4. | கேள்வி | | அ.சா.3.– சுப்பிரமணி அவருடைய சாட்சியத்தில், காலை 11.00 மணியளவில் வெற்றிலையூரணி மாரியம்மன் கோவில் அருகே அவரும், கிருஷ்ணன் என்பவரும் நின்றுபேசிக்கொண்டிருந்தபோது வெம்பக்கோட்டை காவல் |

| | | | |
|---|---|---|---|
| | | | நிலையத்தில் இருந்து காவல் சார்பு ஆய்வாளர் அவர்கள் முன்னிலையில் அ.சா.1 மாலதி வீட்டையும், சுற்றுப்புறத்தையும் பார்த்து பார்வை மகஜர் (அ.சா.ஆ.2) தயார் செய்ததாக சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | தெரியாது |
| 5. | கேள்வி | | அ.சா.4. திரு.காளிமுத்து காவல் ஆய்வாளர் அவருடைய சாட்சியத்தில், 19.07.2019 ம் தேதி தலைமை காவலர் நடராஜன் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது காலை சுமார் 10.00 மணியளவில் வெற்றிலையூரணியை சேர்ந்த மாலதி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் வாக்குமூலத்தினை பெற்று அதன் தன்மைகேற்ப நிலைய குற்ற எண் 284/2019 பிரிவுகள் 294(பி), 354A இ.த.ச மற்றும் பிரிவு 4 பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழான குற்றங்களுக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு (அ.சா.ஆ.3) செய்துள்ளாதாகவும் சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | என்னை வெம்பக்கோட்டை காவல் நிலையத்தில் இருந்து அழைத்தார்கள், அதற்குப் பிறகுதான் என் மீது புகார் கொடுத்துள்ளார் என்பது எனக்கு தெரியும். |
| 6. | கேள்வி | : | அ.சா.4. திரு.காளிமுத்து காவல் ஆய்வாளர் மேலும் அவருடைய சாட்சியத்தில், மேற்படி வழக்கினை அவரது புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 19.07.2019 ஆம் தேதி 11.00 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்று சாட்சிகள் கிருஷ்ணன் மற்றும் சுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தையும் அதன் சுற்றுப்புறங்களையும் பார்வையிட்டு மாதிரி வரைபடம் (அ.சா.ஆ.4) தயார் செய்ததாக சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | தெரியாது |
| 7. | கேள்வி | : | அ.சா.4. திரு.காளிமுத்து காவல் ஆய்வாளர் மேலும் அவருடைய சாட்சியத்தில், சாட்சிகள் மாலதி, கண்ணன் ஆகியோர்களை விசாரித்து அவர்களின் வாக்குமூலங்களை பதிவு செய்ததாக சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | இந்த வழக்கை உதவி ஆய்வாளர் காளிமுத்து மற்றும் காளி ராஜ் ஆகிய இருவரும் விசாரித்தார்கள். உதவி ஆய்வாளர் காளிமுத்து விசாரித்த போது நான் எந்த தவறும் செய்யவில்லை என்றும், தேர்தல் முன்விரோதம் காரணமாக என் மீது வழக்கு புகார் பொய்யாக கொடுக்கப்பட்டுள்ளது என்றும் கூறினேன், அவர் என்னை காவல் நிலையத்தில் இருக்குமாறு கூறினார். சிறிது நேரம் கழித்து ஒரு போன் வந்தது, என் மீது வழக்கு பதிவு செய்வதாக கூறினார். |
| 8. | கேள்வி | : | அ.சா.4. திரு.காளிமுத்து காவல் ஆய்வாளர் மேலும் அவருடைய சாட்சியத்தில், அவருடைய விசாரணையில் இருந்து வழக்கு சம்பவம் உண்மை என்று தெரியவந்து, எதிரியை தேடி வந்த நிலையில், சுமார் 01.00 மணியளவில் வெற்றிலையுரணியில் வைத்து எதிரியாகிய உங்களை கைது செய்து, காவல் அடைப்புக்கு உட்படுத்தியதாகவும் சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | என்னை தொலைபேசி மூலமாக அழைத்து தான் காவல் நிலையத்திற்கு |

| | | | |
|---|---|---|---|
| | | | வருமாறு கூறினார்கள். |
| 9. | கேள்வி | : | அ.சா.4. திரு.காளிமுத்து காவல் ஆய்வாளர் மேலும் அவருடைய சாட்சியத்தில், சாட்சிகள் சிவா மற்றும் தலைமை காவலர் நடராஜன் ஆகியோர்களை விசாரித்து அவர்களின் வாக்குமூலங்களை தனித்தனியாக பதிவு செய்ததாகவும், சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | பொய் |
| 10. | கேள்வி | : | அ.சா.4. திரு.காளிமுத்து காவல் ஆய்வாளர் மேலும் அவருடைய சாட்சியத்தில், அவருடைய விசாரணையில் இருந்து வழக்கு சம்பவம் உண்மை என்று தெரிய வந்ததால் எதிரி மீது பிரிவுகள் 294(பி), 354A இ.த.ச மற்றும் பிரிவு 4 பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழான குற்றங்களுக்காக இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாக சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | பெய் வழக்கு |
| 11. | கேள்வி | : | வழக்கு பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்? |
| | பதில் | : | பெய் வழக்கு |
| 12 | கேள்வி | : | உங்கள் தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் உண்டா? |
| | பதில் | : | இல்லை |

கேள்விகள் என்னால் நேரடியாக எதிரிகளிடம் கேட்கப்பட்டு, அவர்கள் கூறிய பதில் என்னால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது.

நீதித்துறை நடுவர், எண்.2
சாத்தூர்